

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரிமேடு திருத்தணி ரயில் நிலைய பகுதியை சேர்ந்த கழக நிர்வாகி நவீன் குமார் மகன் செல்வகுமாருக்கு மருத்துவ செலவுக்காக திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டுள்ள மருத்துவ உதவித் தொகை காசோலையை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் குடும்பத்தினரிடம் வழங்கினார் அருகில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி தெற்கு ஒன்றியத்தில் கேஜி கண்டிகை ஊராட்சியில் கிளை கழக கூட்டம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தமைக்கு நன்றி தெரிவித்தும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரை மீண்டும் ஆட்சியில் அமர்ந்திட இரவும் பகலும் பாராமல் அயராத உழைப்போம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் ஒன்றிய செயலாளர் கே. ராஜேந்திரன், மற்றும் கிளை கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 187 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஆக.26-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 187 ஆம் நாளான - கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (25.08.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95 தாந்தோணி அம்மன் கோயில் தெரு. 2) வட்டம் 95 அ புதிய ஆவடி சாலை, லட்சுமிபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன். எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, எ.எஸ். பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தலைமை: கோ.கண்ணன்! முன்னிலை: எஸ்.முரளி!

# மயிலை 126வது வட்ட கழக செயற்குழு கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – கோ.வி.லெனின் பங்கேற்பு!

சென்னை, ஆக. 26-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குப் பகுதி 126 வட்டக் கழக சார்பில் செயற்குழு கூட்டம் இன்று (26.8.2025 - செவ்வாய் கிழமை மாலை 6.00 மணி அளவில் சி.பி. ராமசாமி ரோடு எம்.எல்.ஏ. அலுவலகத்தில் நடைபெறும்.

வட்டக் கழக செயலாளர் கோ.கண்ணன் தலைமையில் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி முன்னிலையில் மாவட்ட கழக செயலாளரும் மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த. வேலு மற்றும் தேர்தல் பொறுப்பாளர் கோ.வி.லெனின் ஆகியோர் வருகை தந்து 126வது வட்டக் கழகத்தினர் ஓரணியில் தமிழ்நாடு அதிக உறுப்பினர் சேர்க்கைக்கு நன்றி தெரிவித்தும், வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் வெற்றிக்கு எவ்வாறு செயல்பட வேண்டும் என்று சிறப்புரை ஆற்ற உள்ளார்.

வரவேற்புரை: வட்டத் துணை செயலாளர்கள் தா. ஜான்சன், மோ.சுரேஷ், உ.சரவணன்

எனவே வட்டக் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள் மற்றும், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பாகப் பொறுப்பாளர்கள்(BLA2), பாக தகவல் தொழில்நுட்ப அணி(BDA), பாக இளைஞரணி ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு வட்டச் செயலாளர் கோ.கண்ணன் தெரிவித்துள்ளார்.

### மயிலை த.வேலு சிறப்புரை! கு.வீரபத்திரன் தலைமையில்

# 124வது வட்டக்கழக செயற்க்குழுக் கூட்டம்!

## வட்ட கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு அறிக்கை!

சென்னை, ஆக 26-

124 வது வட்ட அவைத் தலைவர் கு.வீரபத்திரன் தலைமையில் மயிலாப்பூர் தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, விமலா கிருஷ்ண மூர்த்தி எம்.சி. என்.அன்பழகன் ஆகியோர் முன்னிலை யில் 124வது வட்டக் கழகச் செயற்க்குழுக் கூட்டம் இன்று (26.08.2025) மாலை 7.00 மணியளவில், மகிழ் பார்ட்டி ஹால் சிறுங்கேரி மடம் சாலை சென்னை 28ல் நடைபெறுகிறது.

மாவட்ட செயலாளர் மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு உரையாற்றுகின்றார்.

மு.உதயசூரியன், வீ. அருண்குமார், என்.வி. லோகநாதன், மு.சரவணன், வெ.சரண்ராஜ், ஆர்.நதியா, பிரஸ் கே.ரவிகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

எம்..அல்ராஜ், டி.ரூப்நாத் (எ) ரூபத், ஆ. யோகேஸ்வரன், ஆர்.சுந்தர், பி.ஆர்.அருண், எம்.ஜி.கர்ணன், கே.வாசுதேவன் நன்றி கூறுகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டகழகத்தை சார்ந்த மாவட்ட, பகுதி, வட்டக்கழக, நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் BLA2, BDA மற்றும் பாகம் இளைஞர் அணி பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தற்கு நன்றி தெரிவித்தல் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு வட்ட கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு அறிக்கை விடுத்துள்ளார்.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள நடராஜன் தெரு, ராஜா தெருவில் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையான மேலே சென்ற மின்சார இணைப்புகளையும், பழுதடைந்த சிமெண்ட் கம்பங்களையும் அகற்றி புதைவட கம்பிகளாக, வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் முன்னிலையில் மாற்றி அமைத்தனர். உடன் மின்சாரத்துறை, உயர்அதிகாரிகள், பணியாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட முக்கரம்பாக்கம் ஊராட்சியில் த.வெ.க. கட்சியை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அக்கசிலிருந்து விலகி கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்பி, அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் அறிவுறுத்தலன்படி மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆலோசனைப்படி கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கும்முடிப்பூண்டி கி.வே.ஆனந்தகுமார் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர வைக்க இரவும் பகலும் கழகத்திற்காக பணியாற்றுவோம் என்று திமுகவில் இணைந்தவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். உடன் திமுக நிர்வாகிகள் ஜோதி, ஹரிபாபு, விஜயகுமார், குமார், உள்பட பலர் உள்ளனர்.

### முதல்வர் தொடங்கி வைத்தார்!

# திருவள்ளூர் ஒண்டிக்குப்பத்தில் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம்!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. மாணவர்களுக்கு சேர்க்கைகான ஆணைகளை வழங்கினார்! ஆட்சியர் மு.பிரதாப் பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக 26;-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (25.08.2025) திங்கட்கிழமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 173.86 கோடி ரூபாய் செலவில், 19 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை திறந்து வைக்கிறார்கள், இதை தொடர்ந்து திருவள்ளூர் வட்டம், ஒண்டிக்குப்பம், மு.க.ஸ்டாலின் தெரு, சண்முக பத்மாவதிபுரம் பகுதியில் தற்காலிக கட்டடத்தில் செயல்படவுள்ள புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு குத்துவிளக்கேற்றி, மாணவர்களுக்கு சேர்க்கைகான ஆணைகளை வழங்கினார்கள்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சியின் கீழ் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களை சார்ந்துள்ளோர் பயன்பெறும் வகையில் 7 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் நிதி மற்றும் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றம் துறை அமைச்சர் அவர்களால் 2025 - 2026 சட்டமன்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து.

ஏற்கனவே அறிவித்த 12 தொழிற் பயிற்சி நிலையங்களுடன் சேர்த்து மொத்தம் 19 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் சுமார் 25 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் தேர்வு செய்யப்பட 35 மாணவர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கி பயிற்சிகள் துவக்கி வைக்கப்படவுள்ளது. இத் தொழிற் பயிற்சி நிலையம் ஆண்டிற்கு சுமார் 172 மாணவர்கள் பயன்பெறும் வகையில் 4 ஈராண்டு தொழிற் பிரிவுகளும் 2 ஓராண்டு தொழிற்பிரிவுகளும் மொத்தம் 6 தொழிற்பிரிவுடன் செயல்பட உள்ளது. இத் தொழிற்பயிற்சி நிலையத்தில் மேலும் காலியாக உள்ள இடங்களுக்கு நேரடி சேர்க்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தொழிற்பயிற்சி பெறுபவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற்சான்றிதழ் வழங்கப்படுகிறது இச்சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் நல்ல ஊதியத்தில் உடனடியாக வேலைவாய்ப்பு உள்ளது மேலும் தொழிற்பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றவர்கள் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சியும் பெறுவதன் மூலம் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழும் கிடைக்கிறது இவ்விரு சான்றிதழ்களும் நல்ல வேலை வாய்ப்பு பெறுவதற்கும் அரசு வேலைவாய்ப்பில் முன்னிலையும் மேலும் வயது வரம்பில் ஓராண்டு சலுகையும் உள்ளது. ஆகவே பத்தாம் வகுப்பு கல்வித் தகுதி மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி தகுதி உடைய 14 முதல் 40 வரை உள்ள ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து பயன் பெறலாம். மேலும் மகளிர்க்கு உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளாக மாத உதவித் தொகை ரூ.750 மற்றும் தமிழ் புதல்வன் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் அரசு பள்ளியில் பயின்ற மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 மேலும் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக ஐடிஐ பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 3000 வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின்கீழ் கட்டுமான தொழிலாளர் வாரிசுதாரர்களுக்கு புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருவள்ளூர் ஒண்டிக்குப்பம், பகுதியில் காணொளி மூலம் துவங்கப்பட உள்ளது. இத் தொழிற்பயிற்சி நிலையத்தில் 06 - தொழிற்பிரிவுகளில் Advance CNC Machining Technician - 2 வருடம், Computer Hardware Network Maintenance -1 வருடம், Lift and Escalator Mechanic -2 வருடம், Plumber - 1 வருடம், Sheet Metal Worker -1 வருடம், Technician Medical Electronics-2 வருடம், 208 பயிற்சியாளர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

எனவே இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்தி ஐடிஐ பயிற்சியில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தெரிவித்தார்.

### மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி நேர்காணல்!

## முனைவர் சி.பிரதீப் – ஆரணி எஸ். ரோஸ்பொன்னையன் – நிர்வாகிகள் பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக. 26 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தின் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல். 24-5 - 2025 அன்று மீஞ்சூர் அருகே மாவட்ட பொறுப்பாளர். எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது. நேர்க்காணல் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர். முனைவர் சி.பிரதீப் நடத்தினார்.

மாவபட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆரணி எஸ். ரோஸ் பொன்னையன் வரவேற்றார். மீஞ்சூர் அருகே வள்ளூரில் மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் திமுக பொறியாளர் அணி நிர்வாகிகள் நேர்க்காணல் நடைபெற்றது.

இதில் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் முனைவர் பிரதீப் துவக்கி வைத்தார்.

மாவட்ட பொறியாளர் அணி ஆரணி எஸ். ரோஸ் பொன்னையன் வரவேற்புறையாற்றினார்.

இதில் தலைமை செயற்க் குழு உறுப்பினர் பி.ஜெ. மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், உமாமகேஷ்வரி, ஒன்றிய செயலாளர்கள், டி.கே சந்திரசேகர், மு.முரளிதரன், ஆ. ராசா, வே. ஆனந்த்குமார், ஆ. சத்தியவேலு நகர செயலாளர், G.ரவிகுமார், பேரூர் செயலாளர், பி. முத்து, இரா. அறிவடிகன், தமிழரசன், மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் மோ.பிரசாத், துளசிராமன், தமிழ்பிரியன், ஆர், காண்டிபன். சி. மணிகண்டன், கே ஆர் விக்கி மற்றும் கழக உடன்பிறப்புகள் ஜெகன், சுல்தான், பிரபாகர், தீபன், சூர்யா மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## இன்று 10 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,ஆக.26

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் இன்று (26.08.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-12ல் சாத்தாங்காடு நெடுஞ்சாலையில் உள்ள தூய பவுல் மகாஜன மேல்நிலைப்பள்ளி, இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-53ல் வால்டாக்ஸ் சாலை, கொண்டித்தோப்பு காவல் குடியிருப்பில் உள்ள சென்னை மாநகராட்சி சமுதாயக்கூடம், திரு.வி.க.நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-68ல் பெரியார் நகரில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபம், அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-90ல் 100 அடி சாலை, அவுஸ்திரேலியா எக்ஸ்டென்ஷன், கிரிஸ்டல் பேலஸ் எண் 1961சி, கே.எம். ராயல் மஹால், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-96ல் வில்லிவாக்கம், பரசுராம ஈஸ்வர கோயில் தெருவில் உள்ள வெற்றி மஹால், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-119ல், இராயப்பேட்டை, பேகம் சாஹிப் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி சமுதாயக்கூடம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10), வார்டு-133ல் தியாகராயநகர், சோமசுந்தரம் தெருவில் உள்ள சோமசுந்தரம் மைதானம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11), வார்டு-155ல், இராமாபுரம், ராயலா நகர் பிரதான சாலையில் உள்ள வள்ளி வடிவேலன் திருமண மண்டபம், அடையாறு மண்டலம் (மண்டலம்-13), வார்டு-176ல் வேளச்சேரி 100அடி சாலையில் உள்ள முருகன் திருமண மண்டபம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்-14), வார்டு-182ல் கந்தன் சாவடி, சிபிஐ காலனி, 2வது பிரதான சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாயக்கூடம் ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைசார்பில் 173.86 கோடி ரூபாய் செலவில், 19 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை திறந்து வைத்தார்கள், இதை தொடர்ந்து திருவள்ளூர் வட்டம், ஒண்டிக்குப்பம், மு.க.ஸ்டாலின் தெரு, சண்முகபத்மாவதிபுரம் பகுதியில் தற்காலிக கட்டடத்தில் செயல் படவுள்ள புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் ஆகியோர் நேரில் மாணவர்களுக்கு சேர்க்கைகான ஆணைகளை வழங்கினார்கள். உடன் திறன் மேம்பாட்டுத் துறை உதவி இயக்குநர் சித்ரா, பொதுபணித்துறை செயற்பொறியாளர் தேவன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர்கள் க.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் நிர்வாகிகள் உள்ளனர்.